# ஷியாங்சங் (Xiangcheng)




**Population:**
11,160 (2000)
13,750 (2010)
16,900 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 5

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Hsiangcheng, Qagcheng Tibetan, Phyagphreng

**மக்கள்தொகை:** 10,000 in China (1995, Asian Minorities Outreach)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, வகைப்படுத்தப்படாத மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:** 85%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** சீனாவின் சிசுவான் மாநிலத்தின் தென்மேற்கிலுள்ள ஷியாங்சங் பட்டணத்தைச் சுற்றி ஒரு பள்ளத்தாக்கில் 11,000 மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் ஒரு தனி மொழியைப்பேசி சொந்த தனித்தன்மையுடைய வரலாற்றுக்குரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளார்கள். இப்பகுதி மிகுந்த தொலைவில் உள்ளது. ஒரு பயணி ஷியாங்சங்கை இவ்வாறு விவரிக்கிறார் 'பட்டணம் அற்புதமாகக் காட்சியளிக்கிறது. பலமான வீடுகள் பெரிய கற்களைக்கொண்டு கட்டப்பட்டுள்ளன; ஆனால் சன்னல்கள் மிகச் சிறியதாக உள்ளன; ஒருவேளைப் பாதுகாப்பிற்காகவும் வெதுவெதுப்பாக வைக்கவும் இருக்கக்கூடும். குதிரை ஓட்டுபவர்கள் முன்னாட்களில் கொள்ளையர்களுக்குப் பயப்படவேண்டியதிருந்தது.' ஷியாங்சங் மக்கள் அழகான வீடுகளைக் கட்டுகிறார்கள், ஷியாங் மக்களைப்போல இவர்கள் வீட்டுக் கூரைகளின்மேல் வெள்ளைப் பாறைகள் உள்ளன. ஷியாங்சங் மக்களின் வீடுகள் இரண்டு அடுக்குள்ள சதுர வடிவமுள்ளவையாக உள்ளன. சன்னல்களின் சட்டங்கள் பல வர்ணங்களில் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

**அடையாளம்:** சீன அரசாங்கம் இவர்களை ஒரு தனிச் சிறுபான்மை இனமாக அங்கீகரிக்கவில்லை; மாறாக இவர்களைத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்த்துள்ளது. இதன் விளைவாகச் சிலருக்கு மட்டுமே இவர்களைப்பற்றித் தெரியும். 'இவர்கள் தங்களைத் திபெத்தியர்கள், நாஷி மற்றும் சுபி (Subi) மக்களின் வம்சாவளி என அடையாளம் காட்டுகின்றார்கள் என ஓர் ஆவணம் கூறுகிறது. யுஅன் (Yuan) ராஜவம்சத்தைச் சேர்ந்த கூப்லை கானின் (Kublai Khan) தெற்கு நோக்கிய படையெடுப்பில் மங்கோலியாவைச் சேர்ந்த அநேக சுபி மக்களை ஷியாங்சங் பகுதிக்குக் கொண்டுவந்து குடியேற்றினான்.

**மொழி:** ஷியாங்சங் மொழி அநேக மொழிகளின் கலவை போன்று தெரிகிறது. இவர்கள் தங்கள் வீட்டிற்குள் சொந்த மொழியையும் வெளியாட்களோடு கம்பா மொழியையும் பேசுகின்றார்கள். ஷியாங்சங், ஷியங் மொழிப் பிரிவைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

**வரலாறு:** யுன்னான் மாநிலத்தைத் திபெத் மற்றும் சிசுவானோடு இணைக்கும் ஒரு பழமையான கூண்டு வண்டிப் பாதையின் ஓரத்தில் இருந்த ஷியாங்சங்கள் வாழும் பகுதி அநேக நூற்றாண்டுகளாக வெளியாட்களால் தொடப்படாத பகுதியாக இருந்தது. ஓர் எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார், 'ஷியாங்சங்கின் பூகோள அமைப்பு இதை ஒரு தனித்தன்மையான முக்கியத்துவம் வாய்ந்த இடமாக்குகிறது, இதுவே இந்த மக்களின் உறுதியான குணத்தையும் வளர்த்திருக்கக்கூடும். ஷியாங்சங் தெற்கில் ஷொங்தியன்வரை (Zhongdian) ஆளுகை செய்கிறது, மேற்கில் பழமையான யுன்னான்-திபெத் பாதையைக் காக்கிறது மற்றும் திபெத்-சிசுவான் பாதையின் பாதங்கிலிருந்து தாசியலு (Dajianlu (இந்நாட்களில் கங்திங்)) வரையிலான பகுதியைத் துண்டிக்கிறது. பண்டைய காலங்களிலிருந்தே யுத்த வல்லுநர்கள் ஷியாங்சங் பகுதிக்காகப் போட்டிபோடுகிறார்கள்.'




ஜோசப் ராக் கி.பி.1930 ல் இங்குச் சென்றபோது ஷியாங்சங் பகுதி சங்பிலியங் (Sangpiliang) புத்த மடத்தை இருப்பிடமாகக்கொண்ட சஷதிம்பா (Sashatimba) என்ற ஒரு கொள்ளையர்கள் தலைவனால் ஆளப்பட்டது. மற்ற கொள்ளையர்கள் தலைவர்கள் அவனுக்கு ஆட்சி செய்ய உதவிசெய்தனர். 'இவர்கள் ஒன்றாகக் கொள்ளையடிப்பது மற்றும் கொலைசெய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள். அநேக வாரங்கள் எடுக்கும் பிரயாணங்களை மேற்கொண்டு வணிகர் கூட்டங்களையும், கிராமங்களையும் கொள்ளையடிக்கிறார்கள். சீனர்கள் இவர்களுடைய எல்லைக்குள் நுழையத் துணிவதில்லை.'

**மதம்:** ஷியாங்சங்கள் வைராக்கியமான புத்த மதத்தினராவார்கள், இதற்குச் சாட்சியாக இங்கு அநேகப் புத்த கோயில்கள் மற்றும் மடங்கள் உள்ளன.

**கிறிஸ்துவம்:** புத்த மதத்தின் மேலுள்ள தீவிரமான நம்பிக்கை மற்றும் பூகோள அமைப்பின் காரணமாக இவர்கள் சீனாவின் சந்திக்கப்படாத இனங்களில் ஒரு முக்கிய இனமாக உள்ளார்கள். இருந்தும் சில வருடங்களுக்குமுன் ஒரு வாலிபன் இரட்சிக்கப்பட்டு வேதாகமத்தை மேலும் புரிந்துகொள்ளக் குன்மிங் (Kunming) நகரத்திற்குச் சென்றான். இவன் தன் இன மக்களைச் சந்திக்கும் தீவிர விருப்பமுடைய ஒரு வைராக்கியமான சீடன் என நிருப்பித்திருக்கிறான்.